# முதலும் முடிவும்

ஸ்ரீ உ.வே. காரப்பங்காடு **தேசிக ரங்க ராமானுஜய்யங்கார் ஸ்வாமி**

''லக்ஷ்மீ நாதஸமாரம்பாம்'' என்று நமது ஆசார்யபரம்பரை ச்ரிய: பதியான எம்பெருமானை முதல்வனாக வைத்துத் தொடங்குகிறது. ''பிறப்பில் பல் பிறவிப் பெருமான்'' என்கிறபடியே பிபறப்பிலியானவன் ''பிதா புத்ரேண பித்ருமாந்'' ஸர்வலோகபிதா தன் ப்ரஜைகளின் ஒருவரை (அவதார காலத்தில்) பிதாவாக வரித்து தான் பித்ருமானாக (தந்தையுள்ளவனாக) ஆவது போல, ப்ரதமாசாரியன் (ஸ்வதஸ்ஸர்வஜ்ஞன்) சில ஆசாரியர் களிடம் சிஷ்ய வ்ருத்தி பண்ணி ஆசாரியனுடையவனான். முதலில் தானே ஆசாரியனுமாய் சிஷ்யனுமாய் அவதரித்து திருமந்த்ரத்தை வெளியிட்டதில் தானே சிஷ்யனாயிருந்தது சிஷ்யனிருக்குமிருப்பை நாட்டாருக்குக் காட்டுகைக்காக, ஸர்வேச்வரனுக்கும் ஆசார்யனா யிருந்தவர் மூவர் மிகப்ரஸித்தர்-ஆழ்வார், எம்பெருமானார், ஜீயர் என்று நாம் போற்றும் மூவரும்-சடகோபன், இராமானுசன், அழகிய மணவாள மாமுனியான மூவர்.

ஸர்வேச்வரன் தானும் ஆசார்யத்வத்தை ஆசைப்பட்டு ராமாவதாரத்தில் கடற்கரையில் வானர முதலிகளை முன்னிட்டு ''ஏதத் வ்ரதம் மம'' என்று ஒரு சீரிய அர்த்தத்தை வெளி யிட்டான். பின்னர் ஸ்ரீபார்த்தஸாரதியாய் பார்த்தனை (அர்ஜுனனை) முன்னிட்டு சேதநக்ருத் யத்தையும் (உபாயத்தையும்) சரண்யக்ருத்யத்தையும் வெளியிட்டான். இங்கு அர்ஜுனன் ரதி (ஸ்வாமி). க்ருஷ்ணன் (ஸர்வேச்வரன்) ஸாரதி (தாஸன்). ''ஸேநயோருபயோர் மத்யே மே ரதம் ஸ்தாபய'' என்று நியமிக்கும்படி தனது வாத்ஸல்யத்தாலும் ஸௌசீல்யத்தாலும் ஸர்வலோக நியந்தா தன்னை நியாம்யனாய் ஆக்கிவைத்து ''ஸர்வலோக ஸாக்ஷிகம் சகார'' அகிலவுலகங்களும் காணும்படி ஆக்கி வைத்தருளினான். அஸ்தாந ஸ்நேஹ காருண் யாதிகளால் தர்மம் எது அதர்மம் எது என்று கலங்கி ''சிஷ்யஸ்தேஹம் சாதிமாம் த்வாம் ப்ரபந்தம்' என்று தனக்கு நெறியைச் சொல்லும்படி வேண்டிய அர்ஜுனனை முன்னிட்டு கீதாசாஸ்த்ரம் 18 அத்யாயத்தையும் வெளியிட்டு கீதாசாரியன் ஆனான், ''திருமாலை இப்பாட்டிறே'' என்று ஒரு (மேம்பொருள்...) பாசுரத்தைச் சொல்வது போல் பகவத் கீதையாவது இந்த ச்லோகமிறே என்னலாம் போல அமைந்தது ''ஸர்வதர்மாந்'' ச்லோகம். மெய்ம்மைப் பெருவார்த்தையாவது இதுவேயாம். (18-66).

நம்மாழ்வார் பல நிலைகளிலுள்ளவர்களுக்கு உபதேசம் பண்ணினார். முதலில் தமக்குத்தாமே தொழுதெழென்மனனே என்று உபதேசம் பண்ணிக்கொண்டார். மேலே அஜ்ஞர். ஞாநி. ஞாந விசேஷயுக்தர். ஸ்வதஸ்ஸர்வஜ்ஞன் எல்லோருக்கும் உபதேசம் பண்ணினார். இது கேவலம் க்ருபாகாரியம். அஜ்ஞர் என்பது அறிவிலாமானிடங்களான ஸம்ஸாரிகளை ஊரும்

நாடும் உலகமும் தன்னைப்போல் என்கிறபடியே தானே பொலிக! பொலிக! பொலிக! என்று கொண்டாடும்படி இவர்களைத் திருத்தியருளினார். ஞாநி, ஞாநவிசேஷயுக்தர் இவர்கள் மத்யஸ்தர் - நடுவர். ஞானி-த்வய பூர்வ வாக்ய, ஸித்தோபாய நிஷ்டர். பெரியாழ்வார் போல்வார் இவர்கள். மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டு சித்தர் கேட்டிருப்பர். பெரியாழ்வார் உபாயத்தில் அத்யவஸாயமுடையவர், இத்தகு ஞாநிகளுக்கு ப்ராப்யதவரையை உண்டு பண்ண வேண்டி நம்மாழ்வார் உபதேசம் பண்ணுகிறார். ஞாநவிசேஷயுக்தர் பகவத் குணாநுபவமே போது போக்காகக் கொண்டிருந்த உத்தமவாக்ய நிஷ்டரான முதலாழ்வார்கள் போல்வார். ப்ராப்யத்வரை மிக்குள்ளவரிவர்கள். "செஞ்சொற்கவிகாள்! உயிர்காத்தாட் செய்மின்-துரையறிந்து இழிந்து அநுபவம் பண்ணுங்கள் என்று இவர்களுக்கு ஆழ்வார் உபதேசம் பண்ணுகிறார். ஸௌசீல்ய குணத்தில் இழியாதீர் என்று எச்சரிக்கிறார்.

முதற்சொன்ன அஜ்ஞருக்கும் கடைச்சொன்ன ஸர்வஜ்ஞனான ஈச்வரனுக்கும் ஆழ்வார். பலகால் உபதேசம் பண்ணுகிறார். அஜ்ஞரான ஸம்ஸாரிகளுக்கு உபதேசம் தமது ஜ்ஞாநாதிக் யத்தாலும் ஸர்வஜ்ஞனுக்குத் தமது ப்ரேமாதிக்யத்தாலும் பண்ணுகிறார். ஸம்ஸாரிகள் அநர்த்தம்-இழவு-கண்டு பொறுக்க மாட்டாமல் தனது பரிபூர்ண க்ருபையாலே சேதனர்களுக்கும் ஈச்வரனுக்கும் இடையேயுள்ள அறுக்க முடியாத குடல்துடக்கை (உறவை) உத்தேசித்து **வீடுமின் முற்றவும், வண்புகழ் நாரணன், திண்கழல் சேரே, புல்கு பற்றற்றே, மின்னின் நிலையில மன்னுயிராக்கைகள்** என்றெல்லாம் பலபடியாக உபதேசிக்கிறார். இவர்களிடம் சிஷ்ய லக்ஷணம் இல்லாவிடினும் தமது க்ருபையடியாக விஷயாந்தரங்களின் க்ரௌர்யத்தையும் பகவத் விஷயத்தின் இனிமையையும் பகவானது குணப்பெருக்கு, எளிமை, ஆராத்ய ஸௌலபத்வம் எல்லாவற்றையும் விரிவாகவே பேசியருளுகிறார். பகவத்விஷயம் போலே பாகவத விஷயமும் மிகவும் உத்தேச்யம் என்பதையும் காட்டியருளினார்.

ஸர்வேச்வரனுக்கும் பலபடியாக ஆழ்வார் உபதேசத்தைப் பண்ணுவதைத் திருவாய்மொழியில் காணலாம். இவனிடம் சிஷ்ய லக்ஷணபூர்த்தியுண்டு. சிச்சன் அவன் சீர்வடிவை (ஆசார்யன் திருமேனியை) ஆசையுடன் நோக்குமவன் என்று சிஷ்ய லக்ஷணத்தை ஜீயர் காட்டியருளினார். ஆசாரியனான ஆழ்வார் திருமேனியில் அவன் காட்டிய மட்டற்ற ஆதரத்தை ஆழ்வாரே பேசிக்களிப்பது காணலாம். **என் மெய் கலந்தானே, என்னுள் கலந்தானுக்கு அந்தாமத்தன்பு செய்து என் ஆவிசேர் அம்மான், பற்றிலன் ஈசன். பற்றிலனாம்-நித்ய ஸூரிகளிடம் ப்ரேமம் காட்டாமல் அவர்களை மூத்தாள் ஸ்தானத்திலாய்- ஆழ்வாரிடம் இளையாளென்னலாம்படி ப்ரேமத்தைக் காட்டினான். அவனை போகு நம்பி!** என்று ஆழ்வார் ஊடிச் சொன்ன போது போகவில்லை. நின்று தன் ஆர்த்தியையெல்லாம் காட்டி அவருடன் கூடினான். அவர் ப்ரேமத்தால் **ஆன்பின் போகேல்** என்றபோது பசுநிரை மேய்ப்பானொழிப்பான் என்று தானுகக்கும் பசுமேய்த்தலையும் தவிர்ந்துவிட்டான். ப்ராக்ருதமான தமது உடலில் ஆதரம் காட்டுவது, அதை நித்யவிபூதிக்குக் கொண்டு செல்லப்பாரிப்பது தகாது. **மங்கவொட்டு** என்று ஆழ்வார் சொல்ல **விரைகின்றான் விதிவகையே**-ஆழ்வார் விதித்தபடி தானுகந்த அவருடைய திருமேனியைத் தவிர்த்து

தில்யாத்மஸ்வரூபத்தைக் கொண்டு செல்ல த்வரிக்கிறான். ஆச்ரிதபாரதந்த்ர்யம் என்பதைவிட இந்தச் செயல்களை ஆசார்யபாரதந்த்ர்யம் என்று சொல்வதே பொருந்தும். ஸர்வேச்வரனே ஆழ்வார் பெற்ற மேலான உபதேச ஸத்பாத்ரம் என்று அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் ஆசார்ய ஹ்ருதயத்தில் காட்டியருளியுள்ளார்.

இதுவரை பேசியது ஆழ்வாருக்கும் எம்பெருமானுக்குமிடையே உள்ள ஆசார்ய சிஷ்ய பரிமாற்றங்கள். ஆழ்வாருடைய அநுபவரீவாஹமான பாசுரங்களிலிருந்து ஊகித்தறிந்தவை.

மணவாள மாமுனிகளை நம்பெருமாள் ஆசார்யனாக வரித்து சுமார் ஒராண்டு காலம் அவரிடம் பகவத் விஷய காலக்ஷேபம் திருச்செவி சாற்றியது - உபதேசம் பெற்றது நேரில் நடந்த விஷயம். க்ருஷ்ணன் தான் பார்த்தஸாரதியாயிருந்ததை **ஸர்வலோக ஸாக்ஷிகம்** சகார என்று உலகறியக் காட்டியது போல நம்பெருமாளும் மணவாளமாமுனிகளிடம் சிஷ்யவ்ருத்தி பண்ணியது உலகறிந்த சரித்திர பூர்வமான விஷயம்.

அனைத்துலகும் வாழப்பிறந்த ஜகதுத்தாரக ஆசார்யரான இராமானுசனுக்குத் தனது உபயவிபூதி ஐச்வர்யத்தையும் உடைமையாக ஆக்கித்தந்தார் பெரிய பெருமாள். ''உடையவர்'' என்ற சிறப்புப் பெயர் இதனால் ஸ்வாமிக்கு ப்ரஸித்த திருநாமமாயிற்று. இராமானுசனிடம் அரங்கன் உபதேசம் பெற்றதாகச் சரித்திரமில்லை. யதிபுநரவதாரரும் பூர்வாசார்ய பரம்பரையில் கடைசி ஆசார்யருமாகப் போற்றப்படும் மாமுனிகளிடம் திருவாய் மொழி ஆயிரத்தையும் ஐந்து வ்யாக்யானங்களையுங்கொண்டு விரிவாக எடுத்துரைக்க நியமித்து அனைத்து ஆழ்வாரா சாரியர்களுடன் (அர்ச்சை) ஓலக்கமாகவிருந்து, தனது உத்ஸவங்களையெல்லாம் நிறுத்தி வைத்து நித்யப்படி காலக்ஷேபமாக நடத்தும்படி வேண்டி செவிமடுத்துப் பெருமகிழ்ச்சி யடைந்தது ப்ரஸித்த சரித்திரம். **''முப்பத்தாறாயிரப் பெருக்கர்''** என்ற திருநாமம் மாமுனிகளுக்கு நிலைத்து நின்றது.

தனது ஆசாரியரினிடத்தில் தனக்குள்ள ப்ரேமமெல்லாம் ஊரறியும்படி விலக்ஷணமான ஒரு ச்லோகத்தை ஆசாரியன் தனியனாக எம்பெருமான் அருளிச் செய்தான்.

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யாஜாமாதரம் முநிம்.

என்னும் இந்தத் தனியனை வேதத்துக்கு ஓம்என்னுமது போல் அருளிச்செயல், ஸ்தோத்ரங்கள் யாவற்றுக்கும் முன்னே ஸ்ரீவைஷ்ணவர் யாவரும் எல்லாவிடங்களிலும் அநுஸந்திக்கும்படி நியமித்து நடத்தி வைத்தான். தனது சேஷபர்யங்கத்தை ஆசாரியனுக்கு இருப்பாக ஸமர்ப்பித்தான். ஸகல திவ்ய தேசங்களிலும் மாமுனிகள் மட்டும் சேஷாஸநஸ்தராய் ஸேவை ஸாதிப்பது நாம் நித்யம் அநுபவிக்கும் காக்ஷி. எந்த ஆழ்வாருக்கோ ஆசாரியருக்கோ அநுஷ்டிக்கப்படாத திருவத்யயநம் (தீர்த்ததிநம்) இன்றும் அரங்கன் ஸ்ரீரங்கத்தில் மாமுனிகளுக்கு நடத்திவைக்கிறான். இவற்றைவிட உயர்ந்த ஆசார்ய ஸம்பாவனை காணமுடியுமோ?

''லக்ஷ்மீ நாதஸமாரம்பாம்'' என்றது பொதுவானாலும் நமது தரிசனத்தில் ஸம்ப்ரதாயப்படி ப்ரதமாசாரியன் ஸ்ரீரங்கநாதனே. ''ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ:'' என்று தொடங்கும் இப்பெருமான் விஷயமான தனியனன்றோ நமக்கு நித்யாநுஸந்தேயமாய் ப்ரதமாசார்ய தனியனாய் அமைந்துள்ளது? பூர்வாசார்ய பரம்பரையில் முதல் ஆசாரியன் அரங்கன். சரமாசாரியன் (முடிவு) மாமுனிகள். ஸந்நிதிகளிலும் ஸ்ரீவைஷ்ணவ இல்லங்களிலும் இந்த ஆசாரியன் தனியனே (ஸ்ரீசைலேசதயாபாத்ரம்) முதலிலும் முடிவிலும் (சாற்றுமறையில்) அநுஸத்திக்கப்படுவது நாமெல்லாரும் அநுபவிக்கும் நித்யாநுபவம், ப்ரத்யக்ஷம்.